வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November - 2017

| புவியியல் - I | தரம் :- 12(2019) | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி I, 20 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
  பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I மற்றும் பகுதி II ஆகியவற்றிற்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி - I

❖ ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. 1 : 50000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இலங்கை முழுவதற்குமான இடவிளக்கப் படங்களின் எண்ணிக்கை.
   1) 50   2) 70   3) 72   4) 92   5) 100 (   )

2. 1 : 50000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கத் தேசப்படத்தில் சமவுயரக் கோடுகளால் காட்டப்படுவது.
   1) நதிகள்   2) மலைத்தொடர்கள்   3) கடல்கள்
   4) நிர்வாக எல்லைகள்   5) வீதிகள் (   )

3. இடவிளக்கப்படமொன்றில் காணப்படும் பண்பாட்டம்சங்களைக் கொண்ட விடைத்தொகுதி.
   1) காடு, கணவாய், குன்று, பள்ளத்தாக்கு
   2) வீட்டுத்தோட்டம், பாடசாலை, குளம், காடு
   3) பயிர்ச்செய்கை, பள்ளிவாசல், குடியிருப்புக்கள், வீதிகள்
   4) சுவடு, சமவெளி, கால்வாய், புகையிரதப்பாதை
   5) நீரிடைக்கணவாய், திரிகோணகணித நிலையம், இறப்பர், பாலம் (   )

4. 1 : 50000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பரப்பளவினை சதுர கிலோமீற்றரில் குறிப்பிடுக.
   1) 100   2) 400   3) 600   4) 800   5) 1000 (   )

5. ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றிய தகவல்களை மாத்திரம் முன்வைப்பதற்கு அமைக்கப்படும் படம் .
   1) கருப்பொருட்படங்கள்   2) இடவிளக்கப்படங்கள்   3) தேசப்படங்கள்
   4) எண்ணிலக்கப்படங்கள்   5) நவீன படங்கள் (   )

6. 1 : 50000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படங்களை உருவாக்குவதற்கு தற்காலத்தில் பயன்படுத்தப்படும் நவீன படவரைகலைத் தொழில்நுட்பம்.
   1) புவியியல் தகவல் முறைமை (GIS)
   2) புவி இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS)
   3) தொலையுணர்வு நுட்பம் (RS)
   4) செய்மதிப் படமாக்கல் முறை
   5) எண்ணிலக்க படமாக்கல். ( )

7. வளிமண்டல மாறன் மண்டலத்தில் மூன்றாவது மட்டத்தில் காணப்படும் வாயு.
   1) ஒட்சிசன் 2) நைதரசன் 3) காபனீரொட்சைட்
   4) கீலியம் 5) ஆகன் ( )

8. கற்கோளத்தின் புவியோட்டில் அமைந்துள்ள இரு படைகளையும் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
   1) சீயல் படை, சீமாப்படை 2) வெளிமையம், உள்மையம் 3) மேல்மூடி, கீழ்மூடி
   4) மென்மூடி, உள்மையம் 5) சீயல் படை, மூடி ( )

9. புவிஓட்டின் உட்பகுதியில் செயற்படுகின்ற விசைகளினால் தோற்றம் பெறும் முதலாம் வகை நிலவுருவங்கள் கொண்ட விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.
   1) அகழி பள்ளம், தீப்பாறைகள்
   2) கண்டதிணிவுகள், சமுத்திங்கள்
   3) V வடிவப் பள்ளத்தாக்கு, நீர் வீழ்ச்சி
   4) சமுத்திர அகழிகள், குறைகள்
   5) பாரிய பள்ளம், கற்குகைகள் ( )

10. தனது செயற்பாட்டிற்குரிய சக்தியையும் பதார்த்தங்களையும் தமது தொகுதியிலுள்ளேயே பரிமாற்றம் செய்து கொள்ளும் தொகுதி.
   1) மூடிய தொகுதி 2) திறந்த தொகுதி 3) தனித்த தொகுதி
   4) ஆற்றுத் தொகுதி 5) புவித்தொகுதி ( )

11. சூழல் நழுவு வீதம் என்பது.
   1) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 10 மீற்றருக்கும் $6.4°C$ வெப்பநிலை வீழ்ச்சியடைதல்.
   2) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 100 மீற்றருக்கும் $6.4°C$ வெப்பநிலை வீழ்ச்சியடைதல்
   3) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் $6.4°C$ வெப்பநிலை வீழச்சியடைதல்
   4) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 10000 மீற்றருக்கும் $6.4°C$ வெப்பநிலை வீழ்ச்சியடைதல்.
   5) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 100,000 மீற்றருக்கும் $6.4°C$ வெப்பநிலை வீழ்ச்சியடைதல். ( )

12. இரசாயன மற்றும் சேதன அடையற் பாறைகளுக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியது.
   1) களி 2) மாக்கல் 3) ஜிப்சம்
   4) மணற்கல் 5) உருண்டைக்கற்றிரன் ( )

13. உருமாறிய பாறைகளில் ஒன்றான நைஸ் பாறையின் மூலப்பாறையைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.
   1) மணற்கல் 2) சுண்ணாம்புல் 3) குவாட்சைட்
   4) மாக்கல் 5) கிரனைட் ( )

14. உயிர்த்தொகுதி ஒழுங்கமைப்பு மட்டத்தில் இனத்துக்கு அடுத்துள்ள மட்டம்.
   1) குடி 2) தனி 3) இனம்
   4) சாகியம் 5) உயிர்ப்பெருந்திணிவு ( )

The National e-learning Portal for The General Education

15. தகடுகள் ஒன்றோடு ஒன்று மோதும் போது ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக கண்டங்களில் உருவாகும் நிலவுத் தோற்றம் பின்வருவனவற்றில் எது.

1) தீவுகள் 2) அகழி 3) சமுத்திர மலைத்தொடர்
4) மடிப்பு மலைகள் 5) பள்ளத்தாக்குகள் ( )

16. "புவியின் மேற்பரப்பின் பல்வகைமையைக் கற்றல்" புவியியலாகும் என்ற கருத்தினை முன்வைத்த அறிஞர்.

1) கால் ரிட்டர் 2) ரிச்சட் ஹார்ட் சோன்
3) அலெக்சாண்டர் வொன் ஹம் போல்ட் 4) றட்சல்
5) திரவாதா ( )

17. மானிடப் புவியியலின் அடிப்படை அம்சமாகக் கொள்ளக் கூடியது.

1) மனித நடவடிக்கைகளினது இடம் சார்ந்த பல்வகைமைத் தன்மைகளை ஆராய்தல்.
2) மனித நடவடிக்கைகளினது சமூக இடைத் தொடர்புகளை ஆய்வு செய்தல்.
3) மனித நடவடிக்கைகளில் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்.
4) மனித நடவடிக்கைகளினது கலாசார பண்புகளை ஆய்வு செய்தல்.
5) மனித நடவடிக்கைகளினது குடியிருப்புப் பாங்குகளை ஆய்வு செய்தல். ( )

18. 2050 ஆம் ஆண்டில் உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளாக இருக்கும் என எதிர்வு கூறப்படுவது.

1) சீனா 2) இந்தியா 3) ஐக்கிய அமெரிக்கா
4) பாகிஸ்தான் 5) இந்தோனேசியா ( )

19. 2016 ஆம் ஆண்டு உலக வங்கியின் புள்ளிவிபரங்களின் படி சாதாரண வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் அதிகளவில் காணப்படும் நாடு.

1) உப சகாரா 2) சூடான் 3) இந்தியா
4) சோமாலியா 5) எதியோப்பியா ( )

20. சனத்தொகை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் கொண்ட விடைத் தொகுதி.

1) காலநிலை, தரைத்தோற்றம், இயற்கை வளம்
2) பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு
3) பிறப்பு, இடஅமைவு, இடப்பெயர்வு
4) நகராக்கம், கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதி
5) இறப்பு, சிசுமரணவீதம், பிறப்பு, ( )

## பகுதி – II

**அறிவுறுத்தல்கள் :-**

**முதலாம் வினாவுக்கு உட்பட பகுதி – I , பகுதி – II ஆகிய பகுதிகளில் இருந்து குறைந்தது ஒரு வினாவினைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

*1.*

i. *1 : 50000* என்ற அளவுத்திட்டத்தின் நேர்கோட்டளவுத் திட்டத்தினை வரைக.

*(2 புள்ளிகள்)*

ii. பின்வரும் சாய்வுகளினை வரைந்து பெயரிடுக.

*1.* மென்சாய்வு

*2.* கூம்புக்குன்று

*3.* நீரிடைக் கணவாய்

*4.* பள்ளதாக்கு *(4 புள்ளிகள்)*

iii. பின்வரும் பண்பாட்டம்சங்களுக்கான பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வரைக.

a. பாடசாலை

b. வைத்தியசாலை

c. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்

d. தபாற் கந்தோர்

e. A தர பிரதான வீதி

f. நெல்

g. பாலம்

h. புகையிரத நிலையம்

i. பௌத்த விகாரை

j. குளம். *(5 புள்ளிகள்)*

iv. பின்வரும் நிர்வாக எல்லைகளை உரிய நிறம், குறியீடுகளைப் பயன்படுத்தி வரைக.

*1.* மாகாண எல்லை

*2.* மாவட்ட எல்லை

*3.* கிராம சேவகர் எல்லை


*4.* உள்ளூராட்சி சபை

## பகுதி – I

**2.**

i. அருகில் உள்ள புவி அமைப்பின் குறுக்குவெட்டு முகம் காட்டப்பட்டுள்ளது. அவற்றில் X, A, B, D என்பவற்றினைப் பெயரிடுக.

(4 புள்ளிகள்)




ii. மேலே நீர் குறிப்பட்ட X படையமைப்பின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாக விளக்குக

(4 புள்ளிகள்)

iii. வளிக்கோளத்தின் படையமைப்புக்களினை ஒழுங்கு முறையாகக் குறிப்பிட்டு அவற்றில் ஒரு படையமைப்பின் சிறப்பியல்புகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(7 புள்ளிகள்)

**3.**

i. பாறையின் உருவாகத்தினை வரையறை செய்க. (3 புள்ளிகள்)

ii. தீப்பாறைகளை அவற்றின் இரசாயன சேர்க்கையின் அடிப்படையில் பாகுபடுத்தி உதாரணங்களுடன் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

iii. புவித்தகடு அசைவிற்குட்படும் அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றின் ஒன்றினை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

**4.**

i. மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஆறினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. மண்ணின் குறுக்கு வெட்டுமுகம் ஒன்றினை வரைந்து அதன் படைகளை பெயரிடுக. (4 புள்ளிகள்)

iii. a) இலங்கையில் பரம்பியுள்ள உலர்வலய மண்வகைகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

b) மேலே வினா (a) இல் குறிப்பிட்ட ஒரு வகைப்பாட்டின் பரம்பல், இயல்புகள் பொருளாதார நடவடிக்கைகளினைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

## பகுதி - II

**5.**

i. சனத்தொகை வளர்ச்சியின் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

ii. உலகில் சனத்தொகை கூடிய வலயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

iii. a) சனத்தொகையின் சமனற்ற பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக, மானிடக் காரணிகள் இவ்விரண்டினைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

b) மேலே நீர் குறிப்பிட்ட பௌதிக, மானிடக் காரணிகள் ஒவ்வொன்றினை விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

**6.**

i. சனத்தொகைக் கூம்பின் நான்கு வடிவங்களையும் பெயரிடுக. *(4 புள்ளிகள்)*

ii. "இடப்பெயர்வு" என்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ள வரைவிலக்கணத்தைத் தருக? *(3 புள்ளிகள்)*

iii. a) இடப்பெயர்வின் இரண்டு வகைகளைத் தருக. *(2 புள்ளிகள்)*

b) இடப்பெயர்வில் செல்வாக்குச் செலுத்தும் தள்ளுவிசைக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

**7.**

i. இலங்கையில் ஈரவலயத்தில் சனத்தொகை அடர்த்தி உயர்வாகக் காணப்படுவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

ii. இலங்கையில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதனால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

iii. முதியோர் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நான்கு தருக. *(6 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education